மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், பல்லாவரம்

**அசல் வழக்கு எண். 939/2023**

2026 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் 27 ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியாகிய 3–வது நபரின் வாக்குமூலம் 1896–ஆம் ஆண்டு 44வது விதியின் ஏற்பாட்டின் திரு.சி.ப.முல்லைவாணன்,பி.ஏ.,பி.எல்., (Hons) மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நீதிபதி, பல்லாவரம் ஆகிய என்னால் ஆணையிடப்பட்டு உறுதி செய்யப்படுகிறது.

| | | |
|---|---|---|
| பெயர் | : | கஜேந்திரன் |
| த/பெ, க/பெ | : | தாமோதரன் |
| வயது | : | |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| வட்டம் | : | |

**முதல் விசாரணை – வா.சா. 3**

நான் இந்த வழக்கின் வாதி தரப்பு சாட்சி ஆவேன். நான் இத்துடன் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். அதில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். இதில் உள்ள சங்கதிகள் யாவும் நான் சொல்லிதான் தட்டச்சு செய்யப்பட்டதுதான்.

தாவாப்படி தீர்ப்பு வழங்க வேண்டி கேட்டுக்கொள்கிறேன்.

குறுக்கு விசாரணை

1. தாவா வழக்கை தாக்கல் செய்ய வாதி நாகராஜன் என்பவருக்கு எவ்வாறு உரிமை ஏற்பட்டது என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்து என்ன வகைப்பாடு ஆனது என்றால் பட்டா நிலமாகும். அந்த பட்டா எண் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தை யார் யாருக்கு எழுதி கொடுத்தார் என்றால் வெங்கட்ராம ஐயர் அஸ்தினாபுரம் கிராம மக்களுக்கு களமாக பயன்படுத்த 1948 ஆம் ஆண்டு தாவா சொத்தை எழுதி கொடுத்தார். வெங்கட்ராமன் ஐயர் எழுதி கொடுத்த ஆவணத்தை பார்த்தீரா என்றால் அது பரிவர்த்தனை ஆவணமாகும். வெங்கட்ராம ஐயர் என்பவருக்கு எங்களது ஊர் மூலமாக பரிவர்த்தனை ஆவணத்தில் எங்களது தரப்பில் பரிவர்த்தனை செய்யப்பட்ட சொத்து என்ன

வகைப்பாடு என்றால் பட்டா நிலமாகும். அந்த பட்டா யாருக்கு உரிமையானது என்றால் வெங்கட்ராம ஐயருக்கு உரிமையானது.

2. மேற்படி பரிவர்த்தனை ஆவணத்தை படித்துப் பார்த்தீரா என்றால் இல்லை. அந்த ஆவணத்தில் வெங்கட்ராம ஐயர் என்பவருக்கு பரிவர்த்தனை செய்து கொடுக்கப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அது பற்றி தெரியாது. 1987 ஆம் ஆண்டு பூந்தமல்லி மாவட்ட உரிமையில் நீதிமன்றத்தில் தாவா சொத்து தொடர்பாக வழக்கு தாக்கல் செய்து என்ன உத்தரவு பெற்றீர்கள் என்றால் நகராட்சிக்கு எதிராக எங்களது கிராம மக்கள் தாக்கல் செய்த வழக்காகும். நகராட்சிக்கு எதிராக பெற்ற தீர்ப்பாணை வருவாய் துறை மற்றும் மின்வாரியத்துறை கட்டுப்படுத்துமா என்றால் அது பற்றி தெரியாது. தாவா சொத்து தற்போது என்ன நிலையில் உள்ளது என்றால் காலியாக தான் உள்ளது. அதில் கட்டடங்கள் மின் இணைப்பு ஆகியவை உள்ளதா என்றால் இல்லை.

3. தாவா வழக்கு எந்த சங்கத்தின் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் அஸ்தினாபுரம் கிராம பொது நல சங்கம் பெயரில் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. பூந்தமல்லி நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்த சங்கத்தின் பெயர் தெரியுமா என்றால் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ளது போன்று தாவா சொத்து 70 ஆண்டு காலமாக அமைந்துள்ளதா என்றால் ஆமாம். தாவா சொத்தில் தற்போது விவசாயம் செய்து வருகிறீர்களா என்றால் இல்லை.தாவா சத்தானது அரசாங்க பதிவுகளில் அரசு களம் புறம்போக்கு என குறிப்பிட்டுள்ளது என்றும் அது தொடர்பாக வாதியும் நீதிமன்றத்தில் ஆவணம் தாக்கல் செய்துள்ளார் என்றால் அது பற்றி தெரியாது. நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலம் வாதியின் வழக்கறிஞர் மூலம் தயார் செய்யப்பட்டு நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான்.

4. இவ் வழக்கில்இவ் வழக்கில் பிரதிவாதிகள் என்ன எதிர்க்கட்சி எடுத்துள்ளார்கள் என்று விவரம் தெரியுமா என்றால் மின்வாரியத்துறை அவர்களுக்கு உரிமை உள்ளதாக குறிப்பிட்டுள்ளார்கள் ஆனால் அச்சொத்தானது பட்டா இடமாகும் எங்களது கிராமத்திற்கு உரிமையான சொத்தாகும். அரசுக்கு பாத்யமான தாவாசத்தை வாதியுடன் சேர்ந்து அபகரிக்க

வேண்டும் என்பதற்காக இவ்வழக்கில் வாதிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. வழக்கு சம்பந்தமாக எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல.

Typewritten to my dictation in open
court read over to the witness in tamil
in the presence of the accused and
admitted by the witness to be correct.

District Munsif
cum Judicial
Magistrate

MULLAI
VANAN
C P

Digitally signed
by MULLAI
VANAN C P
Location:
Pallavaram
Date: 2026.01.27
19:03:05 +0530